செ.வெ.எண் : 788 23.9.08

## பத்திரிக்கை செய்தி

**சமூக நலத் துறையின் கீழ் செயல்படும் அரசு சேவை இல்லங்களில் பயின்ற முன்னாள் மாணவிகளுக்கு அரசு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் அரசு சேவை இல்லங்கள் ஆகியவற்றில் இளநிலை இல்லக் காப்பாளர்களாக பணி நியமன ஆணை வழங்குதல்**

சமூக நலத் துறையின் கீழ் தாம்பரம், கடலூர், சேலம், சிவகங்கை, திருநெல்வேலி, தஞ்சாவூர் (ம) மதுரை ஆகிய 7 மாவட்டங்களில் அரசு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.

இச்சேவை இல்லங்களில் பலவித சூழ்நிலை காரணமாக தங்களது பள்ளிப்படிப்பை தொடர முடியாமல் இருக்கும் விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்ற ஏழைப் பெண்கள் ஆகியோர் கல்வி பயின்று வருகின்றனர். சமூக நலத் துறையால் நடத்தப்படும் அரசு சேவை இல்லத்தில் சேர்ந்து மீண்டும் தங்களது பள்ளிப் படிப்பினைத் தொடர்ந்து, பள்ளி இறுதி தேர்ச்சி பெற்ற முன்னாள் சேவை இல்ல மாணவிகள் பலர் வேலை இல்லாமல் சிரமப்படும் சூழ்நிலையில் உள்ளனர். இம்மாணவிகளின் துயர் தீர்க்கும் வகையிலும், அவர்கள் தங்கள் வாழ்க்கையினை செவ்வனே நடத்திச் செல்லும் வகையிலும் அரசாணை எண் 55 சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டத் துறை நாள் 22.5.2000–ன்படி, முன்னாள் அரசு சேவை இல்ல மாணவிகளை அரசு சேவை இல்லம் (ம) குழந்தைகள் காப்பகத்தில் காலியாக உள்ள இளநிலை இல்லக் காப்பாளர் பணியிடத்திற்கு ரூ.2750–70–3800–75–4400 என்ற ஊதிய விகிதத்தில் தகுதியின் அடிப்படையில் நான்கு ஊனமுற்றோர் உட்பட 13 நபர்களுக்கு இளநிலை இல்லக் காப்பாளர்களாக பணி நியமன ஆணை மாண்புமிகு சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்களால் 23.9.2008 அன்று வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் போது அரசு முதன்மை செயலர், சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டத் துறை, சமூக நலஆணையர் மற்றும் இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியோர் உடன் இருந்தனர்.

23/9/08

சமூக நல ஆணையர்,
சமூக நலத் துறை,
சேப்பாக்கம்,சென்னை.5.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9